## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 36/2022 | Date : 10.01.2024 | PW1 |
|---|---|---|
| Name: முத்துசாமி | S/o.லட்சுமி நாராயணனன் | |
| Evidence Recorded Time: P.M. 4.45 PM to 5.30 P.M | | |

**குறுக்கு விசாரணை :-**

எந்த பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கல் மண்டபம் எங்களுக்க உரியது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். யார் யாரை தரப்பினரக சேர்த்துள்ளேன் என்றால் மாவட்ட ஆட்சியர், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர், செயல் அலுவலர் ஆகியோரை தரப்பினராக சேர்த்துள்ளேன். செவ்வாய்பேட்டை ஆயிர வைசியர் சமூகத்தை சேர்ந்த தீர்க்க செட்டியார் எங்களுக்கு என்ன உறவு என்றால் நாங்கள் பங்காளி முறை. என் உடன் பிறந்தவர்கள் மொத்தம் இரண்டு பேர். அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் அவர்கள் வாய்மொழி உத்தரவின் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கல் மண்டபம் எதற்காக கட்டப்பட்டது என்றால் எங்கள் சமூகத்தை சேர்ந்த ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக திருமணம் செய்வதற்கு வசதியாக கல்மண்டபம் கட்டப்பட்டது. கல் மண்டபத்தை கட்டியவர் யார் என்றால் ஆயிரம் ஆண்டுகள் ஆகிறது. எங்கள் முன்னோர்கள் கட்டினார்கள். முன்னோர்கள்தான் கட்டினார்கள் என்று என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சின்னம்மா என்கிற பாப்பம்மாள் கட்டளை நிர்வாகத்தில் இருக்கிறார்களா என்றால் கட்டளை நிர்வாகம் என்பது கிடையாது சின்னம்மா என்ற பாப்பம்மாள் கட்டளை செய்து வந்தார். கல் மண்டபத்திற்கு சொந்தமான நிலங்கள் பற்றி தெரியுமா என்றால் எந்த நிலமும் இல்லை. நிலங்கள் உள்ளது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கல் மண்டபத்தின் உற்சவத்திறக்ாக பெரிய சோரகை கிராமத்தில் பட்டா என் 4, ச.எண்.165/1, 151/1 சி, 161/8, 161/9 , 10 ஏக்கர் 59 செண்ட் நிலம் திருக்கோவில் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி நிலத்தின் வருவாய் மூலம் மார்கழி உற்சவம், திருவாதிரை , பங்குனி மாதம் நடைபெறும் உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது என்றால் எங்கள் சொந்த செலவில் நடைபெறுகிறது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கட்டளைக்கு வரி யாரும் செலுத்தவில்லை. நங்களும் எங்கள் பங்காளிகளும் செலவினங்கள் செய்து வருகிறோம். உறசவங்களுக்கு யாராவது பொருளோ, பணமோ கொடுப்பார்களா என்றால் எங்கள் பங்காளிகள் அவர்கள் வசதிக்கு ஏற்றவாறு பணம் கொடுப்பார்கள். சின்னம்மாள் என்ற பாப்பம்மாளுக்கு கட்டளையில் பங்கு உள்ளதா என்றால் அவர்கள் எங்கள் முன்னோர்கள் அவர்கள் ஆரம்பித்த கட்டளையை தான் நாங்கள் செய்து வருகிறோம். கல் மண்டபத்தில் நடைபெறும் அனைத்து உற்சவங்களுக்கும் வரவு செலவு கணக்கு

இந்து சமய அறநிலையத்துறைதான் தணிக்கை செய்து வருகிறது என்றால் சரியல்ல. கல் மண்டபமும் அதை சுற்றி 630 சதுரடி நிலமும் திருக்கோவிலுடன் சேர்த்து நத்தம் வகைப்பாட்டில் 1980ம் ஆண்டிற்கு முன்பே இருந்ததா என்றால் அவ்வாறு இல்லை. திருக்கோவிலுக்கும் எங்கள் கல் மண்டபத்திற்கும் இடையே 500 மீட்டர் தூரம் இருக்கும். ஆயிர வைசியர் சமூகத்தை சேர்ந்த ராமசாமி செட்டியார் , சீனிவாச செட்டியார் ஆகியோரை தெரியுமா என்றால் அவர்கள் எங்கள் பங்காளிகள். அவர்கள்தான் கோவிலின் அறங்காவலர்கள் என்றால் இல்லை. மண்டபத்தின் சாவியை யாரிடம் உள்ளது என்றால் தாத்தாவிற்கு முன்னால் இருந்து எனக்கு விவரம் தெரிய என் தாத்தா, என் அப்பா அதன்பின்பு நான் எங்கள் கையில் தான் மண்டபத்தின் சாவி உள்ளது. மண்டபத்தின் சாவியானது நங்கவள்ளியை சேர்ந்து அருணாசல செட்டியார், அவரின் மகன் நரசிம்ம செட்டியார் பலவருடமாக வைத்துள்ளார்கள் என்றால் இல்லை. சாவி எங்கள் கையில் தான் உள்ளது. எங்கள் கையில் மண்டபத்தின் பொறுப்பு இல்லை என்றும் அருணாசல செட்டியார் வகையறா கையில் உள்ளது என்றால் சரியல்ல. ஆயிரம் வைசியர் சமூகத்தை சேர்த்வர்களுக்கு மேற்படி கல் மண்டபத்தை பயன்படுத்த உரிமை உள்ளதா என்றால் இல்லை எங்கள் அனுமதியுடன் நாங்கள் இலவசமாக கொடுத்தால் பயன்படுத்திக் கொள்ளலாம். கல்மண்டபம் எங்களுக்கும் எங்கள் பங்காளிகளுக்கும் மட்டும் தான் உரிமை உள்ளது. மண்டபத்தில் சாமி சிலை உள்ளதா என்றால் கல் மண்டப தூணில் உள்ளது. கல் மண்டபத்தில் சுண்ணாம்பால் கட்டிய சுவற்றில் வடக்கு தெற்கு இரண்டு பக்கமும் சன்னல் உள்ளது என்றால் சரிதான். அந்த சிமெண்ட் சுவற்றை ஆக்கிரமித்து கடை கட்டியுள்ளோமா என்றால் சரியல்ல. 1950ல் இரண்டு கடை அங்கு இருந்தது. அதன் ஓடு உடைந்து விட்டதால் சிமெண்ட் அட்டை போடப்பட்டது. மண்டபத்தில் சாமி சிலை வைக்க ஊஞ்சல் உள்ளது என்றால் சாமி அங்கு வரும்போது மட்டும் வைப்போம் மற்றபடி அந்த ஊஞ்சலில் திருமணம் ஆன கணவன் மனைவியை மட்டும் உட்காரவைப்போம். மண்டபத்தில் சாமி பூஜைக்குரிய பொருட்கள் வைக்க அறை உள்ளது என்றால் பூஜை பொருளும் வைத்துள்ளோம் அதே போல் மனமகன் அறை, மனமகள் அறை போன்று இரண்டு அறைகள் உள்ளது. சாமி சிலையை வைப்பதற்காகத்தான் ஊஞ்சல் வைக்கப்பட்டது என்றாலும் நான் சொல்வது போல திருமண தம்பதிகளை உட்கார வைப்பதில்லை என்று சொன்னால் சரியல்ல. மண்டபத்திற்கு பின்னால் நந்தவனம் உள்ளது என்றால் இறந்து போனவர்களுக்கு காரியம் செய்ய அதை வைத்துள்ளோம். திருக்கோவிலுக்குரிய நந்தவனத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நந்தவனத்தில் முருங்கை, காய் கறிகள் விளைய வைத்து வியாபாரம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தென்னை மரம் மட்டும் தான் உள்ளது. கல் மண்டபமானது ஆயிர வைசியர் சமூகத்திற்கு உரிய என்று கேட்கிறனா அல்லது எங்களுக்கு மட்டும் பாத்தியமானது

என்று கேட்கிறேனா என்றால் எங்களுக்கு மட்டும் பாத்தியமானது என்று தான் கேட்கிறேன். திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் இறப்பு காரியங்கள் செய்வது கோவிலின் புனித தன்மைக்கு மாறுபாடானது என்றால் அது திருக்கோவிலுக்கே சொந்தமான இடம் இல்லை. சின்னம்மா என்ற பாப்பம்மாள் செய்ததை நாங்கள் எதற்காக செய்து வருகிறோம் என்றால் அவர்கள் எங்கள் முன்னோர்கள் அவர்கள் ஆரம்பித்த கட்டளை நாங்கள் தொடர்ந்து நடத்தி வருகிறோம். கட்டளை தொடர்ந்து இது போல் எவ்வளவு காலம் நடைபெற்று வருவதாக நான் சொல்கிறேன் என்றால் என் தாத்தா காலத்தில் இருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாங்கள் தான் அதற்கான செலவினங்களை செய்து வருகிறோம். நாங்கள் தான் செலவு செய்கிறோம் என்பதற்கு கணக்கு வைத்துள்ளோமா என்றால் சாமிக்கா செய்வதால் கணக்கு எதுவும் வைக்கவில்லை. கோவில் திருவாதிரை உற்சவத்திற்கு சேலம் சின்ன கடையை சேர்ந்த ஆர்.சீனிவாசன் செலவு செய்வார் என்றால் அவர் எங்கள் பங்காளி அவர் கொஞ்சம் கொடுப்பார். நாங்களும் செலவு செய்வோம். அதே போல் கல் உற்சவத்தில் சேலத்தை சேர்ந்த கோபால் செட்டியார் வகையறாவை சேர்ந்தவர்கள் செலவு செய்து வருகிறார்கள் என்றால் அப்படி ஏதும் கிடையாது உற்சவம் மண்டபத்தில் வந்து இறங்கி செல்லும் வரை அனைத்து செலவுகளையும் நாங்கள் தான் செய்வோம். பெரியசோரகை கிராமத்தை சேர்ந்த சீரங்காயிம்மாள், பழனி ஆகியோர்கள் செலுத்தி வரும் குத்தகை தொகையை வைத்து தான் நான் செலவு செய்து வருகிறேன் என்றால் எங்களிடம் யாரும் காசு கொடுப்பதில்லை எங்கள் கை காசு வைத்து தான் செலவு செய்து வருகிறோம். கல் மண்டபம் எங்களு மட்டும் சொந்தமானது என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் கல்வெட்டு தான் உண்டு. திருக்கோவில் உபயதாரர்களால் கல் மண்டபம் கட்டப்பது என்றால் சரியல்ல. என் தாத்தா மராமத்து வேலையை செய்து வந்ததை மட்டும் வைத்து கோவில் கல் மண்டபத்தில் நாங்கள் உரிமை கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

<u>(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)</u>

ஒம்/--PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/--S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.